# முன்னுரை

சிவனடியார்களில் முக்கியமானவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவர். இவர்கள் பல்வேறு குலமரபுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், சிவநெறியிலே ஒன்றுபட்டவர்கள்.

இவர்களைப் பற்றிய வரலாறுகள், பலவிதமான உணர்ச்சி பாவங்களோடும், உள்ளமுருக்கும் சம்பவங்களோடும், பக்திச் சுவையின், அடிப்படையில், நெஞ்சைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. இதனை நூல் வடிவில், சோழநாட்டு அரசர் அனபாயச் சோழனின் மந்திரி சேக்கிழார் வடித்துள்ளார். இதனை 'திருத்தொண்டர் புராணம்' என்றும் ''பெரிய புராணம்' என்றும் கூறுவர்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணமியற்ற முதலடியை ஐயனே எடுத்து தரவேண்டும் என்று வேண்ட, ஐயனும் வானொயில் 'உலகெல்லாம்' என்று ஒலித்து முதலடியை எடுத்துத்தந்தார்.

நமது தேசத்திலுள்ள, புராணங்கள், பெரும்பான்மையானவை, வடமொழி நூல்களை மூலமாகக் கொண்டவை ஆனால் இப்பெரிய புராணம், நம் தமிழ் மொழியிலேயே, முதல் நூலாக மலர்ந்த இலக்கிய நூலாகும். இது ஐந்தாவது வேதம் என்று போற்றப்படுகிறது. இந்த நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சைவத் திருமுறை பன்னிரண்டுள் இந்நூல் பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குகிறது.

இந்நூலைச் செய்த சேக்கீழாருக்கு தக்க மரியாதை செய்த 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற நாமமும், ஞானமுடியும் சூட்டினால் அனபாயச் சோழன் 63 நாயன்மார்களது வாழ்க்கையிலும், சிவபெருமான் எவ்வெவ்வாறு விளையாடல் புரிந்து, முடிவில் தன்னிடம் சேர்த்துக்கொண்டுள்ளார் என்பதன் விவரமே 63 நாயன்மார்களது பாடல்.

இந்நூலுக்கு மனமுவந்து சிறப்புரையளித்த சக்தி தொழில் நிறுவனங்களில் (கோவை) தலைவரும், ராமலிங்கர் பணிமன்றத்தின் தலைவருமான அருட்செல்வர் டாக்டர் நா. மஹாலிங்கம் அவர்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கம்.

இந்நூலை பரிசீலித்து இலக்கண பிழைகளை சரிபார்த்து கொடுத்த பேராசிரியர் மா. வைத்தியலிங்கன் நெ. 4 சோழபுரம் தெரு, திருவான்மையூர், சென்னை - 41, அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்.

இந்நூலுக்கு பிழை திருத்தம் செய்த திருமதி சுபஸ்ரீ மணி அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அனைவரும் பக்தியுடன் பாராயணம் செய்து பயனடைய, பரமனடி பணிபுரியும்.

டி. பட்டம்மாள்